சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

வா.சா. 3 நாள் : 19.08.2025

அசல் வழக்கு எண். 13/2022

பெயர் முகமது ஹாலித் த/பெ முகமது உசேன்

வயது தொழில்

கிராமம் தாலூக்கா

சாட்சியிடம் உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வாதி கொடுத்த நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் கிளியனூர் ஜாம்யா மஷ்ஜித் நிர்வாக கமிட்டியில் 2019–2022 ஆண்டுகளில் இருந்தேன். தற்போது நான் அதில் கமிட்டி உறுப்பினராக இருக்கிறேன். இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி சமீமா பானுவின் தந்தை எங்கள் ஊர். அவர் கணவர் அரங்ககுடியை சேர்ந்தவர். அவர்கள் இருவருக்கும் சொத்து சம்பந்தமான கருத்து வேறுபாடு காரணமாக எங்கள் ஜமாத்தில் ஒரு மனு கொடுத்தார்கள். வீட்டை பார்வையிட்டு ரூபாய் 18 லட்சம் சமீமாபானுவிற்கு அவர் கணவர் ஹாஜமைதீன் கொடுக்கவேண்டுமென்று தீர்மாணித்தோம். அதன்படி அந்த தொகையை எங்கள் நிர்வாகம் சார்பாக வாங்கி சமீமாபானு வசம் கொடுத்துவிட்டோம். அந்த பணத்தை கொடுத்த பிறகு சொத்தை சமீமா பானு தன் கணவர் பெயருக்கே செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். இந்த பிரச்சனையை எங்கள் வழக்கப்படி கணவர் ஊரான அரங்கக்குடி ஜமாத்தில் வைத்து பேசினோம். பேசிமுடித்து போட்ட தீர்மானத்திற்கான அசலை எடுத்து வந்துள்ளேன். அதை வாசாஆ 1 நகலுடன் ஒப்பிட்டு பார்த்து சாட்சி இரண்டுமே ஒன்று தான் என்கிறார். வாசாஆ 2 பணத்தை பெற்றுக்கொண்டதற்கான தீர்மானம் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து சாட்சி

M. [signature]

இரண்டுமே ஒன்று தான் என்கிறார். மொத்தம் பேசியது 18 லட்சம். முதல் தவணையாக ரூபாய் 9 லட்சமும் இரண்டாவது தவணையாக 2.5 லட்சம் ரூபாய் மூன்றாவது தவணையாக 5 லட்சமும் மொத்தம் 16.5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. பாக்கி 1.5 லட்சம் ரூபாய் செட்டில்மெண்ட் செய்த அன்று நேரடியாக அவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விவரங்கள் 12.10.2019 ஜமாத் பதிவேட்டில் உள்ளது. அதை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். 12.10.2019 தீர்மானத்தில் என் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. அன்று நான் ஊரில் இல்லாததால் மற்ற ஐந்து நாட்டாமைகள் கையெழுத்து செய்துள்ளார்கள். தொகையை ஹாஜாமைதீன் தான் கொடுத்தார். ஹாஜமைதீனுக்கு தொகை எப்படி கிடைத்தது என்று எனக்கு தெரியாது. வாசாஆ 4 ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அதனடிப்படையில் தான் இந்த பணம் வாங்குபவரிடமிருந்து பெறப்பட்டு பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஜமாத் நிர்வாகத்திற்கு சட்டப்படியாக அங்கீகாரம் கிடையாது. தாவா சொத்தை நான் பார்வையிடவில்லை. அதனால் கட்டிடத்தின் தன்மை, விஸ்தீரணம் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. வாசாஆ 1 ஆவணத்தில் ஹாஜமைதீன் இரண்டு ஊர் நிர்வாகம் சேர்ந்து எடுத்த முடிவுபடி ரூபாய் 18 லட்சம் கொடுக்கவேண்டுமென்றும் அதை செப்டம்பர் 15க்குள் கொடுத்து வீட்டை பதிவுசெய்துகொள்ளவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரயத் தொகை இரண்டு ஜமாத்தார்கள் சேர்ந்து நிர்ணயம் செய்தது என்றால் சரிதான். சொத்திற்கான மூலபத்திரங்கள் எதையும் நாங்கள் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்று கொடுக்க சொல்லி எங்களிடம் கேட்கவில்லை.

எதனடிப்படையில் 18 லட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது என்று விவரம் இல்லை. குறிப்பாக உபய பார்ட்டிகள் ஒப்புக்கொண்டபடி விலை நிர்ணயித்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாசாஆ 1, 2 ஆவணத்தில் எந்த வரிசை எண்ணும் இல்லை என்றால் சரிதான். வாசாஆ 1 மற்றும் 2 முறையே அரங்ககுடி பஞ்சாயத்து மற்றும் கிளியனூர் பஞ்சாயத்தின் லெட்டர் பேட்கள் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்தில் முகமது ஹாலித் என்று என் கையெழுத்து உள்ளது ஆனால் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்தின் நகல் வழக்கிற்காக கேட்டதால் பின்னிட்டு கொடுத்தோம். அரங்ககுடி நிர்வாகத்தார் கேட்டதால் கிளியனூர் நிர்வாகத்தார் கொடுத்தோம் தேதி நினைவில்லை. அரங்ககுடி கணக்கு பிள்ளை வாங்கி சென்றார் பெயர் தெரியாது. எழுத்து மூலமாக இந்த ஆவணத்தை கேட்கவில்லை. வாசாஆ 1 ஆவணம் ஜமாத் மூலமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. வாதிக்கு ஆதரவாக நாங்கள் தயாரித்து கொடுக்கவில்லை. வாதியை எனக்கு தெரியும். நசுருல்லாவிற்கு சம்சுதீன் என்ன உறவு என்று தெரியாது. சம்சுதீன் அரங்ககுடி ஜமாத்தின் முன்னால் நிர்வாகஸ்தர். அவர் நசுருல்லாவின் சகோதரியின் கணவர் என்றால் அது எனக்கு தெரியாது. சம்சுதீன் கடைசி ஒரு வருடமாகத்தான் ஜமாத் நிர்வாகத்தில் இல்லை அதற்கு முன்பு அவர் நிர்வாகத்தில் இருந்தார். அவர் முத்தவல்லியாக இருந்தார். சம்சுதீன் முத்தவல்லி என்று அவர் கையெழுத்தை வாசாஆ 1ல் போடவில்லை. வாசாஆ 1 ஆவணத்தின் அசல் எங்களுக்கு 28.08.2019ல் கிடைத்தது அதற்கு எந்த குறிப்பும் இல்லை. இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் நசுருல்லா சமீம்பானுவிற்கு கொடுத்த பணத்தை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நசுருல்லா அந்த

M. [signature]

பணத்தை சமீம்பானுவிடமிருந்து வாங்கிகொடுங்கள் என்று மனு கொடுத்தார் தேதி வருடம் நினைவில்லை. அந்த மனுவின் நகல் எங்களிடமில்லை. எங்களுடையை ஜமாத் பதிவேடுகளில் நசுருல்லா பணம் கொடுத்தார் என்ற விவரம் இல்லை. வாசாஆ 4 கிரய உடன்படிக்கையை எந்த தேதியில் பார்த்தேன் என்றால் நான் பார்க்கவே இல்லை. சம்சுதீன், நசுருல்லா ஆகியோர் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நாங்கள் மோசடியாக ஆவணங்களை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே அவை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சொத்துக்களை விற்பவர் வாங்குவர்களுக்குள் விலை நிர்ணயம் செய்ய ஒப்பந்தம் செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. ஜமாத்தார்கள் எடுக்கும் தீர்மானத்திற்கு சம்பந்தப்பட்ட நபர்கள் கட்டுபட்டு செயல்படவில்லை என்றால் அவர்களை ஜமாத்தை விட்டு விலக்கிவிடுவோம் என்றால் சரியல்ல. அவ்வாறு கட்டுப்பட்டு செயல்படவில்லை என்றால் அவர்களை கட்டாயப்படுத்தி செயல்படவைப்போம் என்றால் சரியல்ல. அரங்கக்குடி ஜமாத்தார்கள் கட்டாயத்தின்படி மேற்படி ஆவணங்களை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

M. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 19/8/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை